**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG10 – நிலை I (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2023**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10x1 = 10)**

1. வள்ளலார் தன்னை எதைப்போன்று தாழ்வானவன் என்று கூறிக் கொள்கிறார்?
2. உலக மொழிகளில் தலைசிறந்தது எது என்று கவிஞர் கூறுகிறார்?
3. தேசம் என்ற சொல்லின் பொருள்?
4. அறிவில்லாதவர் நட்பு எதைப்போன்றது?
5. மஞ்சள் பூசுவதால் அழகு பெறுவது?
6. தாமே முன்வந்து உதவும் உறவினர்கள் எதைப்போன்றவர்கள்?
7. ஈழத்தின் தற்போதைய பெயர்?
8. தமிழ் மொழியில் உள்ள சிறப்பு எழுத்துகள்?
9. உயிர் எழுத்துகள் மொத்தம்?
10. வினைச்சொல்லின் தன்மை ஒருமை எவ்வாறு முடியும்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. தமிழை முடியரசனார் எவ்வாறு வாழ்த்துகிறார்?
2. ஊசிக்கும் நூலுக்கும் உள்ள உறவு என்ன?
3. வட்டாசுரன் என்ன வடிவத்தில் திருமாலுடன் போரிட்டான்?
4. மூவேந்தர்கள் யாவர்?
5. வன்னிச்சிறுவன் எதனைப் புகழ்ந்து பாடினான்?
6. நஞ்சு தேர்வை முழுமையாக எழுதினானா?
7. வாழைப்பூவின் சிறப்புகள் யாவை?
8. காஞ்சிபுரத்தில் உள்ள இரண்டு சிறப்புகள்?
9. இராமன் கற்ற துறைகள்?
10. தமிழ்ப்பள்ளிக் கூடத்தில் யார் யார் இருந்தனர்?

11. திணை எத்தனை வகைபெறும்?
12. விருந்தினரை வரவேற்ற குடும்பத் தலைவியின் முகம் எவ்வாறு இருந்தது?
13. இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?.
14. வினைச்சொல் என்றால் என்ன?
15. தமிழ் மண்டபம் எது?

**பகுதி – இ**

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. வீரமாமுனிவர் இயற்றிய சில நூல்களைக் குறிப்பிடுக?
2. தமிழர்கள் விருந்தினர்களை வரவேற்கும் முறை குறித்து குடும்ப விளக்கில் இடம்பெற்ற கருத்துகளை எழுதுக?
3. நஞ்சு உண்ட நாயக மூர்த்தி என்னும் பாடத்தில் இடம்பெற்ற பெயர்கள் சிலவற்றைக் கூறுக.
4. பழமொழி – நூல் குறிப்பு தருக?
5. கிள்ளிவளவன் – குறிப்பு வரைக.
6. இயல்புப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
7. யாப்பு என்றால் என்ன? யாப்பின் உறுப்புகளை எழுதுக.
8. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி யார்? குறிப்பு தருக.

**பகுதி – ஈ**

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக**

*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. உவமை அணி என்றால் என்ன? உவமை அணியின் பகுதிகள் யாவை? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக? .
2. அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி – இப்பாடலடி உணர்த்தும் கருத்துகளை எழுதுக?
3. ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே என்னும் பாடல் வரி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**பகுதி – உ**

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. உம் பாடத்தில் இடம்பெற்ற "மருமலி மலர் நிலவே..." இப்பாடல் வரியில் இடம்பெற்றக் கருத்துகளையும் தேம்பாவணி குறித்தும் எழுதுக
2. ஆகுபெயர் வகைகளை விளக்குக .

*****